# துணை பிரதமர் மற்றும் நேபால் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் நமது வெளிவிவகார அமைச்சர் இடையிலான சந்திப்பு

**மார்ச் 16, 2017**

இந்தியா அறக்கட்டளையின் அழைப்பின் பேரில், மார்ச் 2017 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடுப்பு மாநாடு (சிடிசி), 3 ஆம் பதிப்பில் பங்கேற்பதற்காக மார்ச் 13-17, 2017 இல் நேபால் துணை பிரதமர் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், ஸ்ரீ பிமாலேந்த்ர நிதி இந்தியாவிற்கு பயணிக்க உள்ளார்.

இந்த விஜயத்தின் போது, துணை பிரதமர் மற்றும் நேபால் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீமதி சுஷ்மா சுவராஜ், அவர்களை 16 மார்ச் 2017 அன்று சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையே உயர் மட்ட பரிமாற்றங்கள் உட்பட பரஸ்பர நலன் சார்ந்த இருதரப்பு விஷயங்களினை கலந்துரையாடினர். மேலும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காகவும் , நம் இரண்டு மக்களுக்கு இடையிலான நட்பு மற்றும் சொந்தம் என்ற பாரம்பரிய கட்டுகளை ஆழப்படுத்த தமது அர்ப்பணிப்பினை அவர்கள் வலியுறுத்தினர்.

இந்தியா-நேபால் எல்லையில் ஒரு நேபாள தேசியரின் மரணம் குறித்து வெளிவிவகார அமைச்சர் அனுதாபம் தெரிவித்தார். அவர் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்குள் இந்திய பக்கம் துரிதப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நேபால் அபிவிருத்தியைப் பற்றி நேபால் பிரதி பிரதமர் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார். பேச்சுவார்த்தை மூலம் மற்றும் சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அரசியலமைப்பு ரீதியான செயல் முறைபாட்டினை முன்னோக்கி எடுத்து

செல்ல, நேபால் அரசின் முயற்சிகளில் இந்தியாவிற்கான ஆதரவை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

**புது தில்லி**

**மார்ச் 16, 2017**